<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.47/2022**

**Date**: 24.09.2025.
பி.வா.சா.2 - திரு. மணிகண்டன்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கின் பிராது பற்றிய விபரங்கள் எனக்கு கடந்த 4 வருடங்களாகத் தெரியும். நான் எனது முதல் விசாரணையில் குழந்தைகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ள தங்கப்பழம் அவருடைய சொத்தை, செல்லையா நாடாருக்கு செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்த விபரம் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு நடக்கும் கடந்த 2 ,3 வருடங்களாக அந்த விபரம் எனக்குத் தெரிய வந்தது. செல்லையா நாடார் அவருக்குரிய பங்கையும், தங்கப்பழத்தின் பங்கையும் சேர்த்து அவருடைய மகளுக்கு செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்த விபரம் எனக்குத் தெரியாது. அவருடைய மகள் பெயர் சுப்புலட்சுமி என்ற விபரம் எனக்குத் தெரியும். அந்த சுப்புலட்சுமியிடம் இருந்து வாதி வழக்குப் பட்டிகை சொத்தை வாங்கியிருக்கிறார் என்றால் அது விபரம் எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் இன்று வரையில் வழக்குப் பட்டிகை சொத்தில் வாதிக்கு எப்படி உரிமை கிடைத்தது என்ற விபரம் எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 பிரபுவுக்கு உரிய செட்டில்மென்ட் பத்திரத்தில், வடக்கு மற்றும் கிழக்கு வரதராஜன் மனை என்று குறிப்பிட்டுள்ளது, வாதி வரதராஜனுக்கு உரியது என்றால், சரிதான். தெற்கே பாதை என்றும் மேற்கே ரோடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 4 எல்லைகளும் தவறு ஆகும். இந்த வழக்கின் பிரதிவாதி பிரபுவிற்கு கிடைத்த சொத்தின் பத்திரத்தில் எல்லைகள் தவறாக குறிப்பிட்டுள்ள விபரம் எனக்குத் தெரியும். வா.சா.ஆ.3 ன் படி எல்கைகளுக்குள் உட்பட்ட

சொத்து, பிரபுவின் சொத்து கிடையாது. அந்த செட்டில்மென்ட் படி சொத்தின் விஸ்தீரணம் 2.750 சென்ட்கள் என்றால், சரிதான். பிரபுவிற்கு உரிமைப்பட்ட சொத்தை நான் பார்த்திருக்கிறேன். அதன் எல்லைகள் வடக்கே மேனகாவின் சொத்து, தெற்கே பாதை, கிழக்கே வரதராஜன் சொத்து, மேற்கில் ரோடு. தற்போது என்னிடம் பி.வா.சா.ஆ.2 ல் பிரபுவிற்கு ராதாவும், அசோக்கும் எழுதிக் கொடுத்த விடுதலைப்பத்திரம் என்றால், சரிதான். அதில் கிழக்கு மற்றும் வடக்கில் வரதராஜன் மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தெற்கில் பாதை, மேற்கில் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கின் நீதிமன்ற ஆணையர் பார்வையிட வந்தபோது பட்டிகை சொத்தில் ராதா இருந்தாரா என்ற விபரம் எனக்குத் தெரியாது. நீதிமன்ற ஆணையர் வழக்குப் பட்டிகை சொத்தை அளந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியும். வழக்கு பட்டிகை சொத்து முதலில் பரமார்த்த நாடாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியும். அவருக்கு 5 பிள்ளைகள், அவர்கள் பெயர்கள் எனக்குத் தெரியாது. அவர்கள் பங்கிட்ட சொத்தில், ஒரு சொத்து மட்டும் அந்த குடும்பத்தை சாராதா ஹரி கிருஷ்ணன் என்பவரின் கைவசம் உள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியும். பரமார்த்த நாடாரின் சொத்துக்களை பொறுத்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்திருக்கிறேன். கொஞ்சம் படித்திருக்கிறேன் என்று சாட்சி கூறுகிறார். அந்த பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பிறகு எந்த வித பிரச்சனையும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்துடன், சொத்துக்களின் விஸ்தீரணம் சதர லிங்ஸ் அளவுகளுடன் கூடி அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதியுள்ள விபரம் எனக்குத் தெரியும். அந்த பத்திரத்தில் 5 பிள்ளைகளுக்கு, 5 பாகங்கள் ஒதுக்கப்பட்டு 6 வது பாகம் ஆனது

பாதையாக ஒதுக்கப்பட்ட விபரம் எனக்குத் தெரியும். நான் சாட்சியம் அளிக்கும் பிரபுவிற்கு 2.750 சென்ட்கள் உள்ளன. அதை அளந்து பார்த்தோம். சுமார் 6 மாதம் முதல் ஒரு வருடத்திற்கு முன்னதாக அளந்து பார்த்தோம். வாதி இந்த வழக்கினை என்ன பரிகாரம் வேண்டும் என்று கேட்டுள்ள விபரம் எனக்கு பிரதிவாதி பிரபு சொல்லி தெரியும். நீதிமன்றத்தில் முதல் முதலாக நான் இந்த வழக்கில் தான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். வேறு வழக்குகளில் நான் சாட்சியம் அளிக்க வந்ததில்லை. நான் நீதிமன்றத்தில், எனக்கு சம்பந்தப்படாத நான் அறியாத சொத்துக்களை பற்றி சாட்சியம் அளிப்பது தான் வழக்கம் என்றால், சரியல்ல. பிரபுவிற்கு 2.750 சென்ட்கள் இருந்ததாகவும் அதனை நான் அளந்து பார்த்ததாக வழக்கிற்காக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்குப் பட்டிகை சொத்தில் வாதிக்கு உரிமை எவ்வாறு ஏற்பட்டது என்ற விபரமே தெரியாத நான், இந்த வழக்கில் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க எந்த தகுதியும் இல்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.